324409

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1341 / 8 – 2004 මැයි 17 වැනි සඳුදා – 2004.05.17
*1341 / 8 ஆம் இலக்கம் – 2004 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்

*ச.வ.பி.6/2001*

**2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழில்**

ஒழுங்குபடுத்துதற் சட்டம்

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதற் சட்டத்தின் 78 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் இலங்கைக் காப்புறுதிச் சபையால் ஆக்கப்பட்ட விதிகள்.

லெப்ரினண்ட் ஜெனரல் டெனிஸ் பெரேரா,
தலைவர்,
இலங்கைக் காப்புறுதிச் சபை.

கொழும்பு,
2004 மார்ச்சு 31.

**விதிகள்**

1. இவ்விதி 2004 ஆம் ஆண்டின் காப்புறுதி முகவர் தகைமை (திருத்தம்) என எடுத்துக் காட்டப்படலாம்.

2. 2002 செத்தெம்பர் 23 ஆம் திகதியிட்ட 1255/3 ஆம் இலக்க *அதிவிசேட வர்த்தமானியில்* வெளியிடப்பட்ட 2002 ஆம் ஆண்டின் காப்புறுதி முகவர் விதிகளின் 2 (இ) (1) ஆம் விதி "திறமை" என்ற சொல்லுக்குப் பதிலாக "சாதாரணம்" என்ற செல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ச. வ. பி. 6/2001.*

**2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழில்**

ஒழுங்குபடுத்துதற் சட்டம்

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதற் சட்டத்தின் 26 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 105 ஆம் பிரிவின் கீழ் இலங்கைக் காப்புறுதிச் சபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.

லெப்ரினண்ட் ஜெனரல் டெனிஸ் பெரேரா,
தலைவர்,
இலங்கைக் காப்புறுதிச் சபை.

கொழும்பு,
2004 மார்ச்சு 31.

**விதிகள்**

1. இவ்விதிகள் 2004 ஆம் ஆண்டின் கடனிறுப்பு விளிம்பு (பொதுக் காப்புறுதி) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) சொத்துக்களின் பெறுமதிக்கும் பொறுப்புக்களின் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசமாகவுள்ளதும், இவ்விதிகளில் "காப்புறுதியாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும் பொதுக் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற எவரேனும் காப்புறுதியாளரினால் பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப் படுவதுமான கடனிறுப்பு விளிம்பின் தொகை, பின்வருவனவற்றின் ஆகக்கூடியதைவிடக் குறைவாகவிருத்தலாகாது : -

(அ) 50 மில்லியன் ரூபா ; அல்லது

(ஆ) தேறிய கட்டுப்பணத்தின் 20% சதவீதத்துக்குச் சமமான ஒரு தொகை ; அல்லது

(இ) நடப்பாண்டின் நேர்முற்போந்த மூன்றாண்டுகளுக்குச் சராசரித் தேறிய நிலுவையாகவுள்ள உரிமைக்கோரிக்கைகளின் 40% சதவீதத்துக்குச் சமமான ஒரு தொகை.

(2) ஒராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கடனிறுப்பு விளிம்பு, ஆண்டின்போது எல்லா நேரங்களிலும் பேணப்படுதல் வேண்டுமென்பதுடன், சபையினால் தேவைப்படுத்தப்படின், கணக்காய்வாளரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

3. கடனிறுப்பு விளிம்பின் நோக்கத்துக்காகக் காப்புறுதியாளரொருவரின் பொறுப்புக்களின் பெறுமதி பின்வருவனவாதல் வேண்டும் :

(அ) பின்வருவனவற்றை உள்ளடக்குகின்ற தொழினுட்ப ஒதுக்குகள் :

(i) 1/365 முறையின் அல்லது 1/24 முறையின் அடிப்படையில் கணிப்பிடப்பட வேண்டிய தேறிய உழைக்கப்படாத கட்டுப்பண ஒதுக்கு. கடல்சார் கப்பற்சரக்குக் காப்புறுதியின் விடயத்தில் 40% சதவீத அடிப்படையையும் பயன்படுத்த முடியும் ;

எவ்வாறாயினும், வருடாந்தமானவையாகவிராத காப்புறுதிப் பத்திரங்களுக்காகக் காப்புறுதியாளரொருவர், சபையின் முன்னங்கீகாரத்துடன், உழைக்கப்படாத கட்டுப்பண ஒதுக்கைக் கணக்கிடுவதற்காக வேறேதேனும் தோதான அடிப்படையை கடைப்பிடிக்கலாம்.

மேலேயுள்ள முறைகளுள் ஏதேனுமொன்று தொடர்பில் அவ்வாறு கணக்கிடப்பட்ட உழைக்கப்படாத கட்டுப்பண ஒதுக்கமானது, அதே அடிப்படையில் கணக்கிடப்படும் பின்போடப்பட்ட கொள்ளுதற் செலவுகளுக்காகச் சீராக்கப்படுதல் வேண்டும். எத்தகைய அடிப்படை ஏற்றுக்கொள்ளப்படினும், அது நிதிக்கூற்றுகளில் முழுமையாக வெளிவிடப்படுவதனைக் காப்புறுதியாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ii) தேறிய அடிப்படையொன்றில் கணக்கிடப்பட்ட, முடிவுறாத அபாய ஒதுக்கு ;

(iii) தேறிய நிலுவையாகவுள்ள உரிமைக்கோரிக்கைகளுக்கான ஒதுக்கு ;

(iv) தேறிய அடிப்படையொன்றில் கணக்கிடப்பட்டதும், உறப்பட்டதும் ஆனால் அறிக்கை இடப்படாததுமான உரிமைக் கோரிக்கைகளுக்கான ஒதுக்கு ; அத்துடன்

(v) வேறெவையேனும் எதிர்பாராச் செலவு ஒதுக்குகள்.

(ஆ) ஐந்தொகையிற் காட்டப்பட்டவாறான பொறுப்புக்கள் ; அத்துடன்

(இ) சபையினால் அறிவிக்கப்பட்டவாறு விசேட தன்மையினவான வேறெவையேனும் பொறுப்புக்கள்.

4. கடனிறுப்பு விளிம்பைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்கு கீழே குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தொகைகளில் அல்லது நூற்றுவீதங்களில் பொதுக் காப்புறுதியில் பின்வரும் வகையினவான சொத்துக்களின் கடனிறுப்பு விளிம்பும் ஆகக்குறைந்த நியதிச்சட்டப் பங்கு மூலதனத்தைச் செலுத்திய பின்னர் எஞ்சியிருக்கும் நீண்ட தவணைக் காப்புறுதித் தொழிலின் பங்குதாரர்களின் நிதிகளின் ஏதேனும் மிகையும் நீண்ட தவணைக் காப்புறுதித் தொழிலின் கடனிறுப்புத் தேவைப்பாடுகளும் ஏல்தகவுடையதாகக் கருதப்படுதல் வேண்டும் :

(அ) அரசாங்கப் பிணையங்கள் – 100 % ;

(ஆ) தங்கம் - உண்மையான தொகை ;

(இ) உரிமம் பெற்ற பங்குத்தொகுதிப்பரிவர்த்தனையின் மீது நிரற்படுத்தப்பட்ட ஒரு கம்பெனியின் நிரற்படுத்தப்பட்ட சாதனங்கள் – 35 % ;

(ஈ) நிரற்படுத்தப்பட்ட அல்லது உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் அல்லது உரிமம் பெற்ற விசேடித்த வங்கியொன்றினால் வழங்கப்பட்ட உத்தரவாதமொன்றினால் ஆதரிக்கப்பட்ட முறிகள், தொகுதிக்கடன் பத்திரங்கள், வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் இவற்றையொத்த வேறு நிதிசார் சாதனங்கள் என்பன உட்பட, கூட்டிணைப்புக் கடன்கள் – 30 % ;

(உ) ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியுடனான அல்லது ஏதேனும் உரிமம்பெற்ற விசேடித்த வங்கியுடனான வங்கி வைப்புக்கள் – 50 % ;

(ஊ) இறையிலி காணி அல்லது குத்தகைப்பற்றுநிலம் - 15 % ;

(எ) கட்டிடம் அல்லது குத்தகைப் பற்றுடைமைக் கட்டிடம் - 15 % ;

(ஏ) கூறு நம்பிக்கைப் பொறுப்புக்கள் - 35 % ;

(ஐ) அசைவற்ற ஆதனங்களின் மீதான நிலுவையிலுள்ள ஈட்டுக்கடன்கள் - 20% ;

(ஒ) மீள் காப்புறுதியாளர்களிடமிருந்து அல்லது கையளிக்கும் கம்பனிகளிடமிருந்து வருமதியான தொகைகள் - உண்மையான தொகை ;

(ஓ) நிலுவையாகவுள்ள கட்டுப்பணம் - உண்மையான தொகை.

5. (1) 4 ஆம் விதியின் கீழ் ஏல்தகவுடைய சொத்துக்களின் பெறுமதி பின்வரும் முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் : -

(அ) அரசாங்கப் பிணையங்களின் பெறுமதி ஒன்றில் நேர்கோட்டு முறையை அல்லது தொடர்ச்சியான ஈட்டுகை முறையைப் பயன்படுத்தி முறையான அடிப்படையில் முதிர்வுத் தேதிவரை பிரித்தொதுக்கப்பட்ட கட்டுப்பணங்களைக் கடன்தீர்ப்பதற்காக அல்லது கழிப்பனவுகளைத் திரட்டுவதற்காகச் சீராக்கப்பட்டவாறு, ஆகு செலவில் எடுக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) தங்கமானது ஆகுசெலவின் தொகையில் அல்லது சந்தைப் பெறுமதியில் எது குறைவானதோ அதில் மதிப்பிடப்படுதல் வேண்டும் ;

(இ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப்பரிவர்த்தனையின் விலைகோரப்பட்ட பங்குகள் ஆகுசெலவின் தொகையில் அல்லது சந்தைப் பெறுமதியில் எது குறைவானதோ அதில் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் ;

(ஈ) நிரற்படுத்தப்பட்ட அல்லது ஏதேனும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் அல்லது உரிமம்பெற்ற விசேடித்த வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ஓர் உத்தரவாதத்தினால் ஆதரிக்கப்பட்ட முறிகள், தொகுதிக்கடன்கள், வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் இவற்றையொத்த வேறு நிதிசார் சாதனங்கள் என்பன உட்பட, கூட்டிணைக்கப்பட்ட தனிசுகளின் பெறுமதி முறையான அடிப்படையில் முதிர்வுத் தேதிவரை பிரித்தொதுக்கப்பட்ட கட்டுப்பணங்களைக் கடன்தீர்ப்பதற்காக அல்லது கழிப்பனவுகளைத் திரட்டுவதற்காகச் சீராக்கப்பட்டவாறு, ஒன்றில் நேர்க்கோட்டு முறையை அல்லது தொடர்ச்சியான ஈட்டுகை முறையை அல்லது சந்தைப் பெறுமதியை, இவற்றுள் எது குறைவாகவுள்ளதோ அதனைப் பயன்படுத்தி ஆகுசெலவில் எடுக்கப்படுதல் வேண்டும் ;

(உ) ஏதேனும் உரிமம் பெற்ற வங்கியுடனான அல்லது ஏதேனும் உரிமம் பெற்ற விசேடித்த வங்கியுடனான வைப்புக்களின் பெறுமதி, வைப்பின் முகப்புப் பெறுமதியில், திரண்ட வட்டியையும் சேர்த்து, இருத்தல் வேண்டும் ;

(ஊ) இறையிலி காணியின் அல்லது குத்தகைப் பற்றுநிலத்தின் பெறுமதி, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விலை மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்பட்டு ஆகுசெலவுப் பெறுமதியில் இருத்தல் வேண்டும் அல்லது சபையினால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கிணங்க மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு தொகையில் இருத்தல் வேண்டும் ;

(எ) இறையிலி கட்டிடத்தின் அல்லது குத்தகைப் பற்றுடைமைக் கட்டிடத்தின் பெறுமதி ஆகுசெலவுப் பெறுமதியில் திரண்ட பெறுமானத்தைக் கழித்துவரும் தொகையாக இருத்தல் வேண்டும் அல்லது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விலைமதிப்பீட்டாளரொருவரினால் தீர்மானிக்கப்பட்டு சபையினால் வழங்கப்படும் வழிகாட்டு நெறிகளுக்கிணங்க மீள் மதிப்பீட்டுத் தொகையில், அத்தகைய மீள் மதிப்பீட்டின் பின்னர் திரண்ட பெறுமானத் தேய்வைக் கழித்துவரும் தொகையாக இருத்தல் வேண்டும் ;

(ஏ) ஒருகூறு நம்பிக்கைப் பொறுப்பின் கூறுகள், ஆகுசெலவில் அல்லது முகாமையாளர்களின் வாங்குவிலையில், இவற்றுள் எது குறைவாகவுள்ளதோ அதில், விலை மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் ;

(ஐ) நிலுவையிலுள்ள ஈட்டுக்கடன்களின் பெறுமதி, நிலுவையாகவுள்ள முதலை அல்லது கடனின் தேறிப்பெறத்தகு பெறுமதியை, இவற்றுள் எது குறைவாகவுள்ளதோ அதை விஞ்சுதலாகாது ;

(ஒ) வைத்திருக்கப்பட்ட வைப்புக்கள் உட்பட, மீள்காப்புறுதியாளர் ஒருவரிடமிருந்து அல்லது கையளிக்கும் கம்பனியொன்றிடமிருந்து வருமதியாகவுள்ள தொகைகளின் பெறுமதி, அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டைக் கழித்த பின்னர் வருமதியான தொகையில் இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஓ) மீள்காப்புறுதியாளரொருவரிடமிருந்து அறவிடப்படற்பாலனவான உரிமைக்கோரிக்கைகளின் பெறுமதி, அறவிடமுடியாத மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாட்டைக் கழித்தபின்னர் நிலுவையாகவுள்ள தொகையை விஞ்சாத ஒரு தொகையில் இருத்தல் வேண்டும்.

(2) இவ்விதியின் பந்தி 1 (ஓ) என்பதன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், காப்புறுதியாளரொருவர், எவையேனும் மீதிகள், வருமதியாகவுள்ள தேதியிலிருந்து ஆறுமாதங்களுக்கு மேலாக நிலுவையாகவுள்ள அத்தகைய எல்லா மீதிகளுக்கும் ஐயக்கடனென்ற வகையில் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(3) காப்புறுதியாளர் ஒருவர், வருமதியாகவுள்ள தேதியிலிருந்து ஆறுமாதங்களுக்கு மேலாக நிலுவையாகவுள்ள ஏதேனும் தொகையை, அதற்கு வருமதியான முதலீட்டு வருமானமாகக் கருதுதலாகாது.

(4) இறையிலி காணியின் அல்லது இறையிலி குத்தகைப் பற்றுடைமைக் காணியினதும் மற்றும் கட்டிடத்தினதும் மீள் மதிப்பீடும், அதனைத் தீர்மானிக்கும் முறைபற்றி இவ்விதியின் (1) ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்படாததான எவையேனும் ஏல்தகவுடைய சொத்துக்களின் பெறுமான மதிப்பீடும், இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

6. மூன்றாம் விதியின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை காரணமாக எழுகின்ற ஏதேனும் பிணக்கில், அவ்விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட தற்போது ஏற்புடையனவான வழிகாட்டு நெறிகள் என இலங்கைக் காப்புறுதிச் சபையினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வழிகாட்டு நெறிகளின் பிரதியொன்று ஏதேனும் நீதிமன்றத்தில் சான்றாக ஏல்தகவுடையதாதல் வேண்டுமென்பதுடன், அதன்கண் அடங்கியுள்ள கருமங்களின் முதற்றோற்ற எண்பிப்பாகக் கருதப்படுதலும் வேண்டும்.

7. இவ்விதிகள் நடைமுறைக்குவரும் தேதியன்று, பொதுக் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற காப்புறுதியாளர், இவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட முறை தவிர்ந்த வேறு ஒரு முறைக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய கடனிறுப்பு விளிம்பொன்றைப் பேணுமிடத்து, அத்தகைய காப்புறுதியாளர், இவ்விதிகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இவ்விதிகள் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அத்தகைய முறையைத் தொடர்ந்தும் பயன்படுத்துவதற்கு உரித்துடையதாதல் வேண்டுமென்பதுடன், அதன்பின்னர் இவ்விதிகளில் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுமாறு தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

8. இவ்விதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

"சட்டம்" என்பது, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டம் என்று பொருளாகும் ;

"உரிமம் பெற்ற வர்த்தக வங்கி" மற்றும் "உரிமம் பெற்ற விசேடித்த வங்கி" என்பன, 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1985 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்.

"உரிமம் பெற்ற பங்குத்தொழில் பரிவர்த்தனை" என்பது, திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமம் வழங்கப்பெற்ற பங்குதொகுதிப் பரிவர்த்தனை என்று பொருளாகும்.

"தொழிநுட்ப ஒதுக்கு" என்பது, சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் பேணப்பட்ட தொழிநுட்ப ஒதுக்கு என்று பொருளாகும்.

"கூறு நம்பிக்கைப்பொறுப்பு" என்பது, எந்தக் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் முகாமைக் கம்பெனிக்கு 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமொன்று அளிக்கப்பட்டுள்ளதோ அந்தக் கூறு நம்பிக்கைப் பொறுப்பு என்று பொருளாகும் என்பதுடன், அதனையும் உள்ளடக்கும்.

06 - 02

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.